முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1551

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.12.2023,** வியாழக்கிழமை

1. பரபிரம்ம ஞான சூட்சுமமே
   பரம ஆனந்த ஞான குருவே
   வரம்பல பெற்று என் சக்தியாக
   வையகத்தில் வாழுகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 12 ம் நாள், 28.12.2023, வியாழக்கிழமை)
   வரமாக அரங்கன் நீ தருகின்ற தீட்சை மூலம்
   வையகத்தில் மக்களிடை ஆறுமுகன் யான்
3. ஆறுமுகன் யான் ஆற்றலாக உலவி வருகின்றேன்
   அன்பர்களுக்கு ஆக்கமும் அறமும்
   அதனோடு கூடிய தர்ம சிந்தையும் தயவும் கூட்டி
   தக்க தவராஜன் உன் நெறிவழி வாழ அற்புதம் நடத்துகின்றேன்
4. ஆகவே அரங்கன் தொடர்பு கூட்டி
   அகிலத்தார் தீட்சை பெற்றால் போதும்
   அவர்கட்கெல்லாம் ஞானவான்கள் என்கின்ற அடையாளத்தோடு
   இனி பிறவாத பெரும்பேறு இலகுவாய் சித்திக்கும்
5. சித்திக்க அரங்கன் தொடர்பு கூட்டி
   சித்த நெறி கண்டு உலகோர் தொடர்ந்து வருதல் வேணும்
   வகைபட முறைசெய்ய வழங்கிவரும் அரங்கன் தர்மத்தை
   வரவேற்று உலகோர் எங்கும் செய்துவந்தால்
6. தர்ம நெறி பரவப்பரவ
   தரணியெங்கும் தவசி அரங்கன் விரும்புகின்ற
   நெறிபிறழாத ஞான ஆட்சி
   நீதிமான்கள் தலைமைகொண்ட தர்மஆட்சியாக வளரக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–